*கவனிக்க.-2024.06.20 ஆந் திகதிய இல. 2390 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2391 - 2024 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2024.06.28

*2391 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 4 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 2 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 082584 - 5,403 (2024/06)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவு

### *2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணை விற்பனை*

*1982 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டுக்கும் அதற்குப் பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பதற்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்குமிணங்க 2025ஆம் ஆண்டுக்குள் மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்காக கள்ளுத்தவறணையொன்றை விலைக்கு வழங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக் கூடியவாறாக உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரிசிட்) ;*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரியின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும். கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்-*

*(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.*

*(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

*மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீட்டும்) ;*

*(ஆ) வருமானச் சான்றிதழோடும், கடித உறையில் இட்டு முத்திரை பதிக்கப்பட வேண்டும். (சீல்) அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*4. ஒவ்வொரு கள்ளுத் தவறணைக்காகவும் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் கீழே மேலதிகமாக இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்தில் அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளைப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பப்பட்ட கேள்விப்பத்திரதாரர் "தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்" எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம்*

முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டும் பணமானது பணமாக அல்லது "வங்கியில் செலுத்தப்பட்டதற்காக" எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் மீள் விற்பனைக்காக 2024.09.26ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். ரன்ஜன் பீ.பெரேரா,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2024.05.30.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கமை உப பிரிவு எல்லைக்குள் | மு.ப.11.00 மற்றும் பி.ப. 5.00 | பி.ப.2.00 மற்றும் இரவு 8.00 | ரூபா5,000.00 | 2024, ஓகத்து 29 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை | 2024, செத்தெம்பர் 26 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை |

**குறிப்பு :**

01. 2025 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடத்தில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

02. நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படும் மதுவரி சட்டதிட்டங்களுக்கு மற்றும் கள்ளுத்தவறணை நிபந்தனைகளுக்கு உட்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான சாத்தியமான கள்ளுத்தவறணை விண்ணப்பதாரரினால் தான் கள்ளுத் தவறணை விற்பனை நிலையத்தை நடாத்திக் கொண்டு செல்கின்ற காலப்பகுதியில் அவ் அனுமதிப்பத்திரத்திற்குரிய அனைத்து சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகள் மீறப்படாதபடி முழுமையான ஒப்பந்தமொன்றிற்கு கைச்சாத்திடப்படல் வேண்டும். அவ் ஒப்பந்தத்தை அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற அதிகாரியிடமே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

06- 180

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைவாக கம்பனி ஒன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.**

*நிறுவனத்தின் பெயர்:* கொக்கல டிவலப்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம்:* பீவீ 94405
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* கம்பனி செயலாளர்கள், செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசறி ( பிறைவேட்) லிமிட்டட், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05
*குறைக்கப்படுவதற்கு முன்பு கூறப்பட்ட மூலதனம்:* ரூ. 345, 370, 000.00
*குறைக்கப்பட்ட பின்பு கூறப்பட்ட மூலதனம்:* ரூ. 164, 366, 000.00
*குறைக்கப்பட்ட தொகை:* ரூ. 181, 004, 000.00

செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசறி
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 10,
ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

06- 189

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைவாக பின்வரும் நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

*நிறுவனத்தின் முன்னைய பெயர்:* ஹலால் எக்ரெடிடேஷன் கவுன்சில் (கரண்டி) லிமிட்டட்
*பதிவு இலக்கம்:* GL 2271
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இல. 26பி, றிட்றீட் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 04
*நிறுவனத்தின் புதிய பெயர்:* ஹலால் எஸெஸ்மன்ட் கவுன்சில் (கரண்டி) லிமிட்டட்

செயலாளர்.

06-190

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையில் பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது.

*நிறுவனத்தின் பெயர்:* கொன்வொகிரி (பிரைவேட்) லிமிடெட்
*நிறுவனத்தின் இல.:* PV 00302899
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* 507/ 3A, வீரரோதார மாவத்தை, அர்ராவல, பன்னிப்பிட்டிய
*இணைக்கப்பட்ட திகதி:* 2024.06.11

இயக்குனர்.

06-191

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையில் பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது.*

*நிறுவனத்தின் பெயர்:* க்ளோபல் கிறீன் மார்ட் எஸ்எல் (பிரைவேட்) லிமிடெட்
*நிறுவனத்தின் இல.:* PV 00301826
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* 74, ஆராமய வீதி, கிரிந்த, ஹொண்டியாதெனிய
*இணைக்கப்பட்ட திகதி:* 2024.05.27

இயக்குனர்.

06-192

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவிற்கமைய FINANCE AND GUARANTEE PROPERTY DEVELOPERS (PRIVATE) LIMITED எனும் கம்பனியான நிலைமை 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானத்தின்படி FINANCE AND GUARANTEE PROPERTY DEVELOPERS LIMITED எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

*முன்னைய பெயர்:* FINANCE AND GUARANTEE PROPERTY DEVELOPERS (PRIVATE) LIMITED
*கம்பனியின் தற்போதைய இல.:* PV 1774
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல. 50/21, பழைய கெஸ்பேவ சாலை, ரத்தனபிட்டிய, போரலெஸ்கமுவ
*கம்பனியின் புதிய பெயர்:* FINANCE AND GUARANTEE PROPERTY DEVELOPERS LIMITED

நிறுவனத்தின் முகாமையாளர்,
ஏசியன் கோர்பரேட் செக்ரட்டரீஸ் (பிவிடி) எல்டிடி,
கம்பனி செக்கட்ரிஸ்.

06-196